செ.வெ.எண்: 691 நாள்: 24.10.2020

**அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் நேரில் ஆய்வு**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், பூதலூர் மற்றும் திருவையாறு வட்டங்களிலுள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று(24.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் வட்டத்திற்குட்பட்ட களிமேடு, வல்லம் மற்றும் ஆலக்குடி நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், பூதலூர் வட்டத்திற்குட்பட்ட குலமங்கலம், இந்தலூர், பூதராயநல்லூர், அடைஞ்சூர், கட்டமங்கலம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், திருவையாறு வட்டத்திற்குட்பட்ட குழிமாத்தூர் நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஆகியவற்றை நேரில் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கு பணியில் இருந்த அலுவலர்களிடம் தற்போது எவ்வளவு நெல் இருப்பு உள்ளது, எத்தனை லாரிகள் ஏற்றப்பட்டுள்ளது, எத்தனை விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளது, எவ்வளவு சாக்குகள் மற்றும் தார்பாய்கள் இருப்பு உள்ளது ஆகியவை குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து, அப்பகுதிகளில் நெல் சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவு, எவ்வளவு அறுவடை முடிந்துள்ளது, எவ்வளவு மீதமுள்ளது ஆகியவை குறித்து வருவாய்த்துறை அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டறிந்து, விவசாயிகளிடமிருந்து எவ்வித புகாருமின்றி நெல் கொள்முதல் செய்திடவும், ஒரு நாளுக்கு ஆயிரம் மூட்டைகள் வரை நெல் கொள்முதல் செய்திடவும், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை உடனுக்குடன் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கவும் தொடர்புடைய அலுவலர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், நெல் விற்பனை செய்ய வந்த விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்.

இவ்வாய்வின் போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர்(பொ) திரு.சிற்றரசு, தஞ்சாவூர் வட்டாட்சியர் திரு.வெங்கடேஸ்வரன், பூதலூர் வட்டாட்சியர் திரு.சிவக்குமார், திருவையாறு வட்டாட்சியர் திரு.நெடுஞ்செழியன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.